சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 47/2010

பெயர் திரு. ரமேஷ் நாள். 16.06.2026
த/பெ.

<u>வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியும். வழக்குச் சொத்தின் புல எண்கள் தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். என் தந்ததையின் அரை பாகம் எனக்கு சேர வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதே போல் பக்கிரியின் பாகம் 4, 5 பிரதிவாதிகளுக்கு சேர வேண்டும் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்ததுக்கள் அல்லமால் வேறு சொத்துக்கள் ஆறுமுகத்திற்கு இருந்தது என்று சொன்னால் சரிதான். வழக்கு 1 முதல் 17 இனச் சொத்துக்கள் விவசாய நிலங்கள் என்றால் சரிதான். 18 மற்றும் 19 வீட்டு மனைகள் என்றால் சரிதான். என் அப்பா காலத்தில் வேறு சொத்துக்களை விற்றுள்ளார்கள் என்றால் சரிதான்.

2. 1ம் வாதியும் சொத்துக்களை விற்றுள்ளார் என்றால் சரியல்ல. புல எண் 363/1A, 364/1A1, 364/1B1, 364/8 மற்றும் 364/9B ஆகியவை உரிமையானது என்றால் சரிதான். அந்த சொத்துக்களை நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அந்த சொத்துக்களை 1ம் வாதி விற்றுவிட்டார் என்று தெரிந்து கொண்டு, அவற்றை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2, 3

பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்த விபரம் கிரையத்தின் போது எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் 2ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள கிரைய ஆவணத்தின் உள்ள சாட்சியின் கையொப்பம் என்னுடையது அல்ல. அந்த கையொப்பம் என்னுடையது தான் என்றாலும், என் பாகத்திற்குரிய தொகையை பெற்றுக் கொண்டு தான் அதில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. என் திருமணத்தின் போது என் தகப்பனார் உயிருடன் இல்லை. 1ம் பிரதிவாதி தான் என் திருமணத்தை முன் நின்று நடத்தினார் என்றால் சரியல்ல.

3. 2ம் வாதியின் திருமணத்தின் போது என் தகப்பனார் உயிருடன் இல்லை. நான் ஓட்டுநராக பணிபுரிகிறேன். 2ம் வாதி நெல் தரகராக தொழில் செய்தார். என் சகோதரிகள் திருமணம் ஆகி வேறு இடத்தில் உள்ளனர் என்றால் சரிதான். வழக்கு 1 முதல் 17 இனச் சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1.5 ஏக்கர். வழக்கு சொத்துக்களில் 36 செண்ட் விற்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சொத்துக்களை நான் தான் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். அதிலிருந்து வரும் வருமானத்தில் 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு பாகம் கொடுப்பதில்லை என்றால் சரிதான். வருடத்திற்கு ரூ.5000 வருமானம் வருகிறது. என் தகப்பனார் காலத்திலிருந்து நான் தான் பயிர் செய்து வருகிறேன் என்றால் இல்லை

4. எந்தெந்த சொத்துக்கள் விற்கப்பட்டுள்ளது என்று வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. தற்போது நான் 1 ஏக்கர் தான் பயிர் செய்து வருகிறேன். என் தாத்தா பெயரிலுள்ள பட்டாவில் கண்ட 1 ஏக்கர் சொத்தை

தான் நான் தற்போது அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். அதில் 50 சென்ட் பிரதிவாதிகளுக்கு தர வேண்டும் என்றால் அவர்கள் ஏற்கனவே விற்ற சொத்தில் எனக்கு பங்கு தரவில்லை. என்ன சொத்துக்கள் விற்கப்பட்தென்று வழக்கில் காண்பிக்கபடவில்லை. அவர்கள் விற்றதில் நானும் உடன் சேர்ந்து கையொப்பம் செய்துள்ளேன். என் தகப்பனாரும் 1ம் பிரதிவாதியும் வாய்மொழியாக பாகம் பிரித்து சொத்துக்களை அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அவரவர்கள் ஒதுக்கப்பட்ட சொத்துக்களை விற்றுவிட்டு மீதமுள்ளவை தான் 1 ஏக்கர் என்றால் சரியல்ல.

5. அதனால் தான் விற்ற சொத்துக்கள் குறித்து வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தற்போது 4 மற்றும் 5 பிரதிவாதிகள் 50 சென்ட் எடுத்துக் கொள்வதில் ஆட்சேபனை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதே போல் வீட்டு மனையில் பாதி அவர்களுக்கு தருவதில் ஆட்சேபனை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த வீட்டு மனைகள் 1990 ல் பாகம் பிரிக்கபட்டுவிட்டது. பிரிக்கப்பட்ட சொத்துக்களை மீண்டும் பாகம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என் பாட்டியான 1ம் வாதி தாக்கல் செய்துவிட்டார். நான் தாக்கல் செய்யவில்லை. என்னை 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு பாகம் கொடுக்க கூடாது என்ற எண்ணம் என்றால் அவர்கள் விற்ற சொத்தில் எனக்கு பங்கு கொடுத்துவிட்டு வழக்கு சொத்தில் பாகம் எடுத்துக் கொள்ளலாம்.

6. பிரதிவாதிகளுக்கு பாகம் சேரக்கூடாது என்பதற்காக வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் தவறான சங்கதிகள் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிரிக்கப்பட்ட சொத்துக்களுக்கு மீண்டும் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் விவசாய நிலங்கள் பாகம் பிரிக்கப்படவில்லை. பிரதிவாதிகள் பிரிக்க தொடங்கி தயாராக இருந்தார்கள் என்றாலும், நான் தான் பாகம் தரக்கூடாது என்று வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகளில் 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு பாதி பாகம் உரிமையுள்ளது என்றால் சரியல்ல. தவறான தகவல்களுடன் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், முறையான சொத்து விபரங்கள் அளிக்காததாலும் அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தின் வருமானத்தில் 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு பாகம் தரவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை